தினகரன்

கல்லூரி படிப்பில்

# மாணவர்கள் முழுகவனம் செலுத்த வேண்டும்

## துணை வேந்தர் அறிவுரை

பெங்களூரு, பிப்.18: மாணவர்கள் படிக்கும்போது பாடத்திட்டத்தில் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று ஜெயின் பல்கலை துணைவேந்தர் டாக்டர் என். சுந்தரராஜன் கூறினார்.

பெங்களூருவில் நடந்த ஜெயின் கல்லூரி மாணவர்களுக்கான படிப்புதவி வழங்கும் விழாவில் பல்கலை, துணைவேந்தர் டாக்டர் என்.சுந்தரராஜன் கூறியதாவது: கல்வி பயிலும்போது மாணவ மாணவிகள் தங்களின் முழு கவனத்தையும் பாடத்தின் மீதே செலுத்த வேண்டும். நன்றாக படித்தால் மட்டுமே எந்த துறையில் நுழைந்தாலும் சாதிக்க முடியும். தற்போது கல்வி குறித்த விழிப்புணர்வு அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. மாணவ, மாணவிகளிடம் அந்த காலத்தை விட அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. படிக்கும்போது எல்லோருக்கும் உதவிகள் கிடைப்பதில்லை.

உதவி பணம் கிடைக்க வேண்டும் என்றால் நன்றாக மதிப்பெண் எடுக்கவேண்டியது அவசியமாகும். என்னுடைய கல்லூரி படிப்பு செலவினங்கள் அனைத்தும் ஸ்காலர்ஷிப் மூலமாகவே கிடைத்தது என்றார்.

இதைத்தொடர்ந்து மாணவ மாணவிகளுக்கு மொத்தம் ரூ.50 லட்சம் படிப்புதவி தொகைகள் வழங்கப்பட்டன. இதில் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாணவ- மாணவிகள் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.